பார்ப்பதற்கு இதுவரை செலவிடப்பட்ட பணத்திலேயே பாலம் கட்டியிருக்கலாமென்று தெரிய வருகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், இது குறித்து மிக விரைவாக நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விரைவாக நடவடிக்கை எடுக்கப் படும்.

கிராமச் சாலைகள் திட்டத்திற்கு தலைமைப் பொறியாளர்.

* 150 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமச் சாலைகள் திட்டத்திற்கு (Rural Roads Scheme) தனித் தலைமைப் பொறியாளரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (இ) கிராமச்சாலைகள் திட்டத்திற்கு (Rural Roads தனித் தலைமைப் பொறியாளரை நியமிக்கும் செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நெடுஞ்சாலைத் துறைக் கொள்கைக் குறிப்பு விவாதமொன்றில் கிராமச் சாலைகள் தொடர்பாகக் குறிப்பிட்டு, இந்தத் திட்டத்திற்கு தனித் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட வேண்டு மென்ற கருத்து சொல்லப்பட்டபோது, அப்போது இருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள், ‘இது குறித்து பரிசீலனை செய்வோம்’ என்ற உறுதி மொழியைக் கொடுத்தார்கள். 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய சுமார் 2,800 கிராமங்களில் 4,800 கிலோ மீட்டருக்கு மேல் சாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. இதற்காக 28 கோடி ரூபாய் தேவைப்படும். இப்படிப்பட்ட மிகப் பெரிய திட்டம் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும் போது, அந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த, செம்மையாகச் செயல்படுத்த தனி தலைமைப் பொறியாளர் இருந்தால்தான் சிறந்ததென்று நினைக்கிறேன். எனவே இது குறித்து செயற்குறிப்பு இப்போது இல்லா விட்டாலும், தலைமைப் பொறியாளரை நியமிப்பது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா?

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே நான்கு தலைமைப் பொறியாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், பிற மாவட்டச் சாலைகள் இவைகளையெல்லாம் சேர்த்து கவனிக்க ஒரு தலைமைப் பொறியாளர் இருந்து கொண்டிருக்கிறார். தேசிய நெடுஞ்சாலைகளுக்காகவும், மத்திய சாலைகள் நிதித் திட்ட வேலைகளுக்காகவும் ஒரு தலைமைப் பொறியாளர் இருந்து கொண்டிருக்கிறார். பாம்பன் பாலத் திட்டத்திற்காக ஒரு தலைமைப் பொறியாளர் இருந்து கொண்டிருக்கிறார். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஒரு தலைமைப் பொறியாளர் இருந்துகொண்டிருக்கிறார். இவர்களே இந்த வேலைகளையும் பார்த்துக்கொள்ள முடியுமென்பதால், இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: கிராமச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து தலைமைப் பொறியாளர் நியமித்தால், அதற்கேற்ப அந்தப் பணிகள் சிறக்குமென்றுதான் சொன்னேன். கிராமச் சாலைகள் திட்டத்திற்காக இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள்தான் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதை நான்காக உயர்த்த அரசு முன்வருமா? இப்போது 10 மாவட்டங்களுக்கு 10 டிவிஷன்கள்தான் இருக்கின்றன. இன்னும் ஐந்து மாவட்டங்களுக்கு டிவிஷன்கள் அமைக்கப்படவில்லை. எனவே ஐந்து மாவட்டங்களுக்குப் புதிதாக டிவிஷன்கள் அமைப்பது குறித்தும், கண்காணிப்புப் பொறியாளர்களை நான்காக உயர்த்தவும் அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நான் ஏற்கெனவே, இதே மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய இன்னொரு கேள்விக்கு பதில் அளித்தபோது, கண்காணிப்புப் பொறியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகள் அதிகமாக இருக்கின்றன, அதைக் குறைக்க இன்னும் அதிகமான கண்காணிப்புப் பொறியாளர்களைப் போடும் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னேன். ஆகவே கண்டிப்பாக அது பரிசீலிக்கப்படும்.

நகராட்சிப் பள்ளி மேற்பார்வையாளர்கட்கு மோட்டார் சைக்கிள் வாங்கக் கடன்.

*151 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிதண்ணீர் திட்ட மேற்பார்வையாளர்கள், பொது மராமத்து மேற்பார்வையாளர்கள், ஆகியோருக்கு வழங்கப்படுவதைப் போன்று,